## இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு – 2017

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2002 இன் 35 ஆம் இலக்க இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தின் 34 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் ஆண்டறிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் உப பிரிவின் பிரகாரமான விபரமான அறிக்கையொன்று ஆணைக்குழுவின் தலைவருக்கு 2018 யூலை 31 ஆந் திகதி வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை, இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் 2017 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 16

(i) நியமத்தின் 34 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்தொன்று அதனது முன்கொண்டுசெல் தொகையிலிருந்து பொருண்மையாக வேறுபடுகையில் ஆண்டுதோரும் மீள் மதிப்பீடுசெய்ய வேண்டுமென்பதுடன், முன்கொண்டுசெல் பெறுமதி குறிப்பிடத்தக்களவில் வேறுபடாதிருக்கையில் மாத்திரம் ஒவ்வொரு மூன்று வருடங்களுக்கு அல்லது ஐந்து வருடங்களுக்கு ஒரு தடவை மீள் மதிப்பீடு செய்ய வேண்டியிருந்த போதிலும், 04 சொத்து வகுப்புக்கள் மீள்மதிப்பீடு செய்யப்படாதிருந்ததுடன், 02 சொத்து வகுப்புக்கள் மாத்திரம் 2011 ஆம் ஆண்டில் இறுதியாக மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்தன.

(ii) நியமத்தின் 51 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லாத சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் ஆண்டுதோரும் மீளாய்வு செய்யப்படாமை காரணமாக ரூபா 49,965,467 தொகையான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்டிருந்த போதிலும், தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அதற்கமைய, மதிப்பீட்டுத் தவறானது இலங்கை கணக்கீட்டு நியமம் 08 இன் பிரகாரம் திருத்தப்பட்டு திருத்திய முன்கொண்டு செல் தொகையினை நிதிக்கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 19

நியமத்தின் 57 ஆம் பந்தியின் பிரகாரம் ஊழியர் ஓய்வூதிய நலன் ஒதுக்கீட்டிற்காக எதிர்வுகூறப்பட்ட சாராசரி நிறையளித்தல் முறையின் அடிப்படையில் நம்பகரமான மதிப்பீடொன்றை மேற்கொள்ள வேண்டிய போதிலும், அதற்கு முரணாக இறுதியாக பெற்றுக்கொண்ட மாதச் சம்பளத்தினை அடிப்படையாகக் கொண்டு கொள்கையொன்று இனங்காணப்படாது செயற்படுத்தப்பட்டிருந்தது.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

2016 ஆம் ஆண்டின் நிலையான சொத்துக்கள் அகற்றுதல் பதிவேட்டின் படி, ரூபா 1,664,243 கிரயமான முழுமையாகப் பெறுமானத்தேய்விடப்பட்டு முடிவுற்ற ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்கள் 2017 ஆம் ஆண்டில் அகற்றப்பட்டிருந்ததுடன், அச்சொத்துக்களின் கிரயம் மற்றும் திரண்ட பெறுமானத்தேய்வு ஏற்பாடு என்பன கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை.

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2009 இன் 20 ஆம் இலக்க மின்சக்தி அதிகாரச்சட்டத்தின் 46 ஆவது பிரிவு மற்றும் அனுமதிப்பத்திர உடமையாளர்களுக்கு வழங்கப்படுகின்ற மின் உற்பத்தி அனுமதிப்பத்திர நிபந்தனை இலக்கம் 11 இன் பிரகாரம் ஆணைக்குழுவிற்குச் செலுத்த வேண்டிய வருடாந்தம் தீர்மானிக்கப்பட்ட வாடகையாக 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் மின்சார சபையிலிருந்து ரூபா 81,852,700 தொகையும் 2017 ஆம் ஆண்டு தொடர்பில் ஏனைய நிறுவனங்களிலிருந்து ரூபா 212,962 தொகையும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆணைக்குழுவிற்கு கிடைக்க வேண்டியதாக இருந்தது.

(ஆ) உராய்வு எண்ணெய் விற்பனை செய்யும் கம்பனிகளிலிருந்து அறவிடப்படுகின்ற அரையாண்டு மாறும் பதிவு செய்தல் கட்டணங்களுக்குரிய காலப்பகுதி முடிவடைந்து 30 நாட்களுக்குள் ஆணைக்குழுவிற்குச் செலுத்த வேண்டியிருந்த போதிலும், ஒரு தனியார் கம்பனியிடமிருந்து 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளிற்காக முறையே ரூபா 460,780 மற்றும் ரூபா 673,918 என்ற வகையில் ரூபா 1,134,698 மொத்தத் தொகையும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடமிருந்து 2017 இன் இரண்டாம் அரையாண்டிற்காக ரூபா 5,000,000 தொகையும் 2018 யூன் 30 இல் உள்ளவாறு அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| 2002 இன் 35 ஆம் இலக்க இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தின் 3(1) மற்றும் 3(2) ஆம் பிரிவுகள் | ஆணைக்குழுவின் அங்கத்தவர்களின் எண்ணிக்கையில் ஏதேனும் குறைவுகள் ஏற்டின் 03 மாதங்களிற்குள் அக்குறைவுகள் நிரப்பப்பட வேண்டிய போதிலும், ஒரு அங்கத்தவர் பதவி 2014 செப்தெம்பர் 30 ஆந் திகதி முதல் வெற்றிடமாகக் காணப்பட்டதுடன், அதன் காரணமாக அத்திகதியிலிருந்து ஆணைக்குழுவின் அங்கத்தவர்களின் எண்ணிக்கை 05 ஆகக் காணப்பட்டது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 111,090,475 மிகையாக இருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 3,082,655 ஆக இருந்தமையால், நிதி விளைவுகளில் ரூபா 114,173,130 முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் மாறும் பதிவு செய்தல் கட்டண வருமானம் ரூபா 83,069,537 இனால் அதிகரித்தும் மதியுரைச் சேவைச் செலவினம் ரூபா 29,068,000 இனால் குறைவடைந்தும் காணப்பட்டமையே இதற்கான பிரதான காரணங்களாக இருந்தன.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2014 ஆம் ஆண்டில் செயற்பாட்டு விளைவுகள் 68 சதவீதத்தால் வளர்ச்சியடைந்திருந்த போதிலும், 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2015 ஆம் ஆண்டில் 84 சதவீதத்தினாலும் 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2016 ஆம் ஆண்டில் 176 சதவீதத்தாலும் குறைவடைந்து 2017 ஆம் ஆண்டில் அது மீண்டும் 3704 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. எவ்வாறாயினும் நிதி விளைவுகளிற்கு ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றை மீண்டும் சீராக்கும் போது 2016 ஆம் ஆண்டில் ரூபா 98,274,006 ஆக் காணப்பட்டன பங்களிப்பு 2017 ஆம் ஆண்டில் ரூபா 217,476,959 வரை அல்லது 121 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் ஒட்டுமொத்த வருமானமாகிய ரூபா 331,248,532 தொகையில் மின்சார ஒழுங்கமைத்தலிற்காக இலங்கை மின்சார சபை, லங்கா மின்சார தனியார் கம்பனி மற்றும் மின்சார உற்பத்தியாளர்களிடமிருந்து அறவிடப்பட்ட வருடாந்த மாறும் பதிவுக் கட்டணம் ரூபா 132,791,385 தொகையும் உள்ளடங்கியிருந்ததுடன், அது மொத்த வருமானத்தில் 40 சதவீதமாக இருந்தது. 2016 ஆம் ஆண்டில் அந்த வருமானம் ரூபா 49,721,848 ஆக காணப்பட்டமையால் அதிலேற்பட்ட வளர்ச்சி 167 சதவீதமாக இருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் ஒட்டுமொத்த செலவினமாகிய ரூபா 220,158,057 தொகையில் செயற்பாட்டுச் செலவினம் ரூபா 114,199,535 தொகையும் உள்ளடங்கியிருந்தது. முன்னைய ஆண்டின் செயற்பாட்டுச் செலவினம் ரூபா 103,057,057 ஆகக் காணப்பட்டமையால் அந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் செயற்பாட்டுச் செலவினம் 11 சதவீதத்தினால் அதிகரித்திருந்ததுடன், 2016 ஆம் ஆண்டில் ரூபா 40,028,733 தொகையாக காணப்பட்ட மதியுரைச் சேவைச் செலவினம் 2017 ஆம் ஆண்டில் ரூபா 10,960,733 ஆக காணப்பட்டமையால் அதிலேற்பட்ட குறைவு 73 சதவீதமாக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 செயற்பாட்டு மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மின்சார துறையினை அடிப்படையாகக் கொண்டு 12 நீண்டகால இலக்குகளிற்கு முன்னுரிமையளித்து 10 துறைகளின் மூலம் 2017 ஆம் ஆண்டில் ரூபா 249,784,240 நிதி ஏற்பாட்டுடன் கூடிய 86 செயற்பாடுகளை அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன், 06 துறைகளின் கீழான ரூபா 22,154,437 மதிப்பீட்டுப் பெறுமதி கொண்ட 11 செயற்பாடுகள் தொடர்பில் எதிர்பார்த்த இலக்குகளை அடைவதற்கு முடியாது போயிருந்தது. அது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சுற்றாடல் தாக்கங்களை மீளாய்ந்து களனிதிஸ்ஸ மற்றும் சப்புகஸ்கந்த அனல் மின் நிலையங்களுடன் தொடர்புடைய சுற்றாடல் நடவடிக்கைகளை தொடர்ச்சியாக கண்காணிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட திட்டத்தின் படி 2017 மே மாதத்தில் வரைபு சுற்றாடல் செயலாற்றல் அறிக்கையினை ஆராய்ந்து முடித்து சுற்றாடல் செயலாற்றல் அறிக்கையிடல் சட்டகமொன்றை அறிமுகப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டு அதற்காக ரூபா 1,182,000 ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அச்செயற்பாடு 2017 ஆம் ஆண்டினுள் பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) பிரதான மின்வலு மூலங்களிலிருந்து மின்சாரம் வரை எரிசக்தியினை மாற்றீடு செய்வதுடன் தொடர்புபடுகின்ற புறக்கணித்தல் கிரயத்தினை மதிப்பிடுதல் திட்டமிடப்பட்டவாறு 2017 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை.

(iii) பெற்றோலிய உற்பத்திப் பொருட்களின் விலைகளை தீர்மானிப்பதற்கான நியதிகளை தயாரிப்பதற்கு 2017 ஆம் ஆண்டில் திட்மிடப்பட்டிருந்த போதிலும், அதற்காகத் தயாரிக்கப்பட வேண்டிய எண்ணெய் விலைகளை தீர்மானிப்பதற்கு தற்போது பயன்படுத்தப்பட்டு வருகின்ற முறை குறித்த அறிக்கை மற்றும் 2017 ஆகஸ்ட் 31 ஆந் திகதியளவில் எண்ணெய் விலைகளை தீர்மானிப்பதுடன் தொடர்புடைய இறுதி அறிக்கை என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. செயலாற்றல் அறிக்கையின் படி 2017 ஒக்தோபர் 09 ஆந் திகதி அதன் வரைபு அறிக்கை மாத்திரம் தயாரிக்கப்பட்டிருந்தது.

(iv) ‘‘அனுப்புதல் கணக்காய்வு’’ (Dispatch Audit) என்ற செயற்பாட்டின் மூலம் குறைந்த கிரயத்தில் மின்சாரத்தினை வினைத்திறனாக உற்பத்தி செய்வதற்காக திட்டமிடப்பட்டிருந்தது. 2017 ஒக்தோபர் 31 ஆந் திகதியளவில் இறுதி அறிக்கையினை (final dispatch audit report) தயாரிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன், குறித்த செயற்பாடு 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. இருப்பினும், இலங்கை மின்சார சபையினால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய சுய மதிப்பீட்டு அறிக்கை மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள் மீதான அறிக்கை ஆகியவற்றை சமர்ப்பித்தலின் தாமதம் காரணமாக இச்செயற்பாட்டினை எதிர்பார்க்கப்பட்டவாறு நிறைவேற்ற முடியாதிருந்ததாக ஆணைக்குழுவினால் குறிப்பிடப்பட்டிருந்தது.

(v) 2017 ஆம் ஆண்டிற்காக திட்டமிடப்பட்டிருந்த இலங்கை மின்சார சபையின் குறுங்காலக் கடன்கள் மீதான ஆய்வு (Study on Short Term Debt of CEB) மற்றும் அனுமதிக்கப்பட்ட கட்டணத்திற்கான மூலப்பொருள் பயன்பாட்டு மீதான குறியீட்டு ஆய்வு (Study on Indexation of Material used for Allowed Charges) போன்ற செயற்பாடுகளின் இறுதி அறிக்கைகளை முறையே 2017 ஒக்தோபர் 30 மற்றும் 2017 நவம்பர் 30 ஆந் திகதிகளில் தயாரிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அந்த அறிக்கைகள் வரைபு நிலையிலேயே காணப்பட்டன. இலங்கை மின்சார சபையினால் தேவையான தரவுகள் சமர்ப்பிக்கப்படாமை காரணமாக தாமதம் ஏற்பட்டுள்ளதாக ஆணைக்குழுவினால் குறிப்பிடப்பட்டிருந்தது.

(vi) 2018 ஆம் ஆண்டிற்காக அனுமதிக்கப்பட்ட கட்டணத் துறைகளை மீளாய்வு செய்தல் (Review of Allowed Charges Field for 2018) என்ற செயற்பாட்டின் மீதான இறுதித் தீர்மானத்தினை 2017 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் வழங்குவதற்கு திட்மிடப்பட்டிருந்த போதிலும், திட்டமிடப்பட்டவாறு குறித்த செயற்பாட்டினை நிறைவேற்ற முடியாது போயிருந்தது.

(vii) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி பதவியணியினரின் பணிகளை இலகுபடுத்தவதற்காக 06 முறைமைகளை அறிமுகப்படுத்துவதற்கு திட்மிடப்பட்டிருந்த போதிலும், 2017 ஆம் ஆண்டில் அவற்றில் 04 முறைமைகள் மாத்திரம் பூரணப்படுத்தப்பட்டிருந்தன.

(viii) மனித வள மற்றும் நிதிப் பிரிவுகளின் கணனிப் பயன்பாட்டினை அதிகரித்தல் மற்றும் இணையதளத்தினை அபிவிருத்தி செய்தல் ஆகிய செயற்பாடுகளை முறையே 2017 யூலை மற்றும் செப்தெம்பர் மாதங்களில் பூரணப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அதற்கேற்ப அச்செயற்பாடுகள் பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ix) 2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை அதிகாரச்சட்டத்தின் 43 ஆம் பிரிவு மற்றும் 2013 இன் 31 ஆம் இலக்க இலங்கை மின்சார (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவு ஆகியவற்றின் பிரகாரம் பிறப்பாக்க அனுமதிப்பத்திரதாரர் ஒருவரினால் நீண்டகால ஆகக்குறைந்த பொருளாதாரக் கிரய உற்பத்திப் பொறியினை விரிவுபடுத்தும் திட்டம் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் பிறப்பாக்க அனுமதிப்பத்திரதாரரான இலங்கை மின்சார சபை 2018 – 2037 காலப்பகுதிக்கான நீண்டகால ஆகக்குறைந்த பொருளாதாரக் கிரய உற்பத்திப் பொறி விரிவுபடுத்தும் திட்டத்தின் வரைபு (Least Cost Long term Generation Expansion Plan) ஆணைக்குழுவிற்கு 2017 மே 05 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், 2017 ஆம் அண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் அது நீண்டகால உற்பத்தித் திட்டத்தினை மீளாய்வுசெய்தல் எனக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அத்திட்டம் திருத்தங்களுடன் 2017 யூலை 19 ஆந் திகதி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், திருத்தப்பட்ட திட்டத்தினை அவ்வாறே செயற்படுத்துவதற்கு இருதரப்பும் இணக்கப்பாட்டிற்கு வந்திருக்கவில்லை.

இது தொடர்பாக ஆணைக்குழுவினால் கருத்துத் தெரிவிக்கையில் மின்சார சபையினால் எழுத்துமூலம் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட விளக்கமளித்தல்களிற்கு ஆணைக்குழுவினால் எழுத்துமூலம் பதிலளிக்கப்பட்டது என்றும், மின்சார மற்றும் எரிசக்தி துறைக்கான பாராளுமன்ற உப குழுவினால் அவ்வப்போது அழைப்பு விடுக்கப்பட்டு கூட்டப்பட்டிருந்த கூட்டங்களிலும் பொருளாதார முகாமைத்துவத்திற்கான அமைச்சரவைக் குழுக் கூட்டங்களிலும் ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் கலந்துகொண்டிருந்ததுடன் தொடர்புடைய தரப்பினர்களால் விசாரணை செய்யப்பட்ட விடயங்களிற்கான விளக்கமளித்தல்கள் எழுத்துமூலமும் வாய்மொழி வாயிலாகவும் வழங்கப்பட்டன என்றும் ஆகையால் இரு தரப்பிற்குமிடையே இணக்கப்பாட்டிற்கு வரப்பட்ட திட்டத்தினை நடைமுறைப்படுத்த முடியாத பொறுப்பினை ஆணைக்குவிற்கு சுமத்துதல் நியாயமற்றது என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

(x) 2017 ஆம் ஆண்டிற்காக திட்டமிடப்பட்டிருந்த விநியோ வலைப்பின்னலிற்கான கூட்டிணைந்த மின்கல களஞ்சிய முறைமையில் தொழில்நுட்ப சாத்தியவள பகுப்பாய்வு (Analyze Technical Feasibility of Integrating Battery Storage System) என்ற செயற்பாடு 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(xi) மின்சாரப் பட்டியலின் மாதிரி வடிவத்தை மாற்றுதல் என்ற செயற்பாட்டின் (New format for Electricity Bill) கீழ் மின்சாரப் பட்டியலொன்றில் கட்டணங்கள் மற்றும் செலவினம் தொடர்பாக குறைந்தபட்சம் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பில் தீர்மானமெடுத்தலை 2017 செப்தெம்பர் 14 ஆந் திகதி மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், இது வரை அப்பணி மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(xii) பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்ப முகாமைத்துவ திட்டத்தினை தயாரித்து அமுலாக்குதல் (Preparation and implementation of Safety and Technical Management Plan) என்ற செயற்பாட்டின் கீழ் குறித்த திட்டத்தினை தயாரிப்பதற்காக 2017 மார்ச் மாதத்தில் மதியுரைஞர் ஒருவர் நியமிக்கப்பட்டு 2017 திசெம்பர் 31 ஆந் திகதி பூரணப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும், மதியுரைஞர் ஒருவரை நியமித்தல் அல்லது உரிய செயற்பாட்டினை பூரணப்படுத்துதல் என்பன இடம்பெற்றிருக்கவில்லை.

(ஆ) 2002 இன் 35 ஆம் இலக்க இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தின் 1(2) ஆம் பிரிவின் படி பொதுப் பயன்பாட்டுத் தொழில்களான மின்சாரம், நீர் வழங்கல் சேவை மற்றும் பெற்றோலியப் பொருட்கள் போன்றன பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவிற்கு பொறுப்பளிக்கப்பட்டிருந்ததுடன், 2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை அதிகாரச்சட்டத்தினால் இந்த ஆணைக்குழுவின் சேவையினை மின்சார தொழிலிற்குப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இருப்பினும், பெற்றோலிய மற்றும் நீர்வழங்கல் சேவைத் தொழில்களிற்கு ஆணைக்குழுவின் சேவையினைப் பெற்றுக்கொள்வதற்கு ஏற்ற சட்டப்பின்னணியொன்று 2018 மே மாதம் வரையிலும் தயாரிக்கப்பட்டிராமையால் ஆணைக்குழுவின் கண்காணித்தல் பணிகள் மின்சார தொழிலிற்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டுள்ளதுடன், 2006 யூன் 08 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் பெற்றோலியக் கைத்தொழிலின் உராய்வு நீக்கிகள் மற்றும் கிரீஸ் வகைகளிற்குரிய கண்காணிப்போராக மாத்திரம் ஆணைக்குழு செயற்படுகின்றது.

**4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) மின்சார பிறப்பாக்கக் கிரயம் மீதான ஆய்வுகள்**

மின்சார பாவனையாளர்களிற்கு தாங்கிக் கொள்ளக்கூடிய கட்டணமொன்றின் கீழ் மின்சார நுகர்விற்கு சந்தர்ப்பத்தை வழங்கும் விதத்தில் மின்சார உற்பத்திக் கிரயத்தில் குறிப்படத்தக்களவு பகுதியான செயற்பாட்டு மற்றும் பேணுகைக் கிரயத்தினை குறைப்பதற்கான வாய்ப்பினை கருத்திற்கொண்டு அது தொடர்பில் நியமங்களை ஏற்படுத்துவதற்காக ஆய்வொன்றை மேற்கொண்டு பரிந்துரைகளைப் பெற்றுக்கொள்வதற்காக ஆணைக்குழுவினால் இந்தியக் கம்பனியொன்றுடன் யூஎஸ்டொலர் 36,416 (ஏறத்தாழ ரூபா 5,600,000) பெறுமதிக்கு 2017 யூலை 25 ஆந் திகதி உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடப்பட்டிருந்தது.

2017 திசெம்பர் 25 ஆந் திகதி அச்செயற்பாடு தொடர்பான இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் குறித்த மதியுரைக் கம்பனியினால் ஆரம்ப அறிக்கை மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 2017 செப்தெம்பர் 25 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட வேண்டிய இடைக்கால அறிக்கை 2018 சனவரி 15 ஆந் திகதியும் 2017 நவம்பர் 25 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட வேண்டிய இறுதி வரைவு அறிக்கை 2018 ஏப்ரல் 29 ஆந் திகதியும் வழங்கப்பட்டிருந்ததுடன், இறுதி அறிக்கை இதுவரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) இலங்கையில் மின்சாரப் பாவனை மற்றும் கட்டணம் மீதான ஆய்வு**

2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை அதிகாரச்சட்டத்தின் 3(1) (அ) பிரிவு மற்றும் 2009 யூன் 03 ஆந் திகதிய மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சரினால் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்ட மின்வலுத் தொழிலுடன் தொடர்புடைய சாதாரண கொள்கைகள் வழிகாட்டல்களின் படி ஆணைக்குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்புக்களில் இலங்கையின் மின்வலுப் பாவனை மற்றும் கட்டணங்கள் தொடர்பில் ஆய்வொன்றை மேற்கொண்டு அது சம்பந்தமாக அரசாங்கத்திற்கு பரிந்துரைகளை வழங்குதல் என்ற கருமம் 2015 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையிலுமான ஆணைக்குழுவின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது. இதற்கான ஆய்வொன்றை மேற்கொள்வதற்காக ஆணைக்குழுவினால் ரூபா 9,547,300 பெறுமதிக்கு உசாத்துணை நிறுவனமொன்றுடன் 2016 யூலை 01 ஆந் திகதி உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடப்பட்டிருந்தது. 48 வார உடன்படிக்கைக் காலத்தில் பூரணப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த இக்கருமம் 2017 யூன் 30 ஆந் திகதியளவில் பூரணப்படுத்தப்பட வேண்டிய போதிலும், 2017 திசெம்பர் 31 வரை இக்கருமத்தை பூரணப்படுத்துவதற்கு குறித்த நிறுவனம் தவறியிருந்தது. 2011 முதல் 2015 வரையான காலப்பகுதிக்குரிய மின்வலு பாவனை தொடர்பான தரவுகளை மின்சார சபை வழங்கியிருக்காமை காரணமாக ஆய்வினை முன்னெடுப்பதற்கு முடியாது போயிருந்ததாக ஆணைக்குழு குறிப்பிட்டிருந்த போதிலும், ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தின் 15(1)(அ) மற்றும் 15(2), 15(3) ஆகிய பிரிவுகளின் பிரகாரம் சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

மேற்படி ஆய்விலிருந்து பெறப்படுகின்ற தகவல்களின் அடிப்படையில் ஆணைக்குழுவினால் வரப்பிரசாதங்கள் கிடைக்கப்பெறாத பாவனையாளர் குழு மற்றும் குறைவருமானம் பெறும் நபர்களிற்காகவும் நிவாரணக் கட்டண முறையொன்றை ஏற்படுத்துததல் (Regulation on disadvantaged and provision of life-line tariffs) 2017 இன் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், ஆரம்பப் பணியின் தாமதம் காரணமாக இக்கருமதத்தினை மேற்கொள்வதற்கு முயடிாது போயிருந்தது.

**(இ) மாறும் பதிவுக் கட்டணங்கள்**

(i) உராய்வு நீக்கிகளை விற்பனை செய்கின்ற 12 நிறுவனங்களினால் 2017 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டிற்காகவும் 10 நிறுவனங்களினால் இரண்டாவது அரையாண்டிற்காகவும் விற்பனை வருமானங்களை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன், 02 நிறுவனங்கள் முதல் அரையாண்டிற்காகவும் ஒரு நிறுவனம் இரண்டாவது அரையாண்டிற்காகவும் கட்டணங்களை செலுத்துவதற்கான படிவத்தினையும் விற்பனை அறிக்கைகளையும் சமர்ப்பித்திருக்காமை காரணமாக உராய்வு நீக்கிகளை விற்பனை செய்கின்ற நிறுவனங்களினால் ஆணைக்குழுவிற்குச் செலுத்த வேண்டிய மாறும் பதிவுக் கட்டணங்களின் சரியான தன்மையினை உறுதிப்படுத்த முடியவில்லை. விற்பனை வருமானங்களை உறுதிப்படுத்தும் ஆவணங்களை பெற்றுக்கொள்தல் தொடர்பில் உரிய நடைமுறையொன்றை ஆணைக்குழு பின்பற்றாதிருந்தமை இதற்குக் காரணமாக அமைந்திருந்தது.

(ii) 2006 யூன் 08 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் படி ஆணைக்குழு பெற்றோலியத் தொழிலிலுள்ள உராய்வு நீக்கிகள் மற்றும் கிரீஸ் வகைகளின் கண்காணிப்பாளராக தொழிற்பட்டு வருகின்ற போதிலும், தற்போது நடைமுறையிலுள்ள மாறும் பதிவுக் கட்டண செலுத்துதல் முறையின் படி உராய்வு நீக்கிகளை விற்பனை செய்வோரின் அரையாண்டு விற்பனைப் பெறுமதி ரூபா 2.5 மில்லியனை தாண்டும் சந்தர்ப்பங்களில் விற்பனை வருமானத்தில் 0.75 சதவீதம் ஆணைக்குழுவிற்கு கிடைக்கப்பெறாமையால் உராய்வு நீக்கிகளை விற்பனை செய்கின்ற ஒருசில வியாபாரிகளிடமிருந்து கட்டணம் அறவிடப்படாது கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது.

**4.3 இயக்கச் செயற்பாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மின் பிறப்பாக்கம், பரிமாற்றம் மற்றும் விநியோகித்தல் தொடர்பில் அனுமதிப்பத்திர தாரர்களிற்கு வழங்கப்பட்டிருந்த அனுமதிப்பத்திரத்திலுள்ள 11 ஆம் இலக்க நிபந்தனையின் படி குறித்த ஆண்டிற்கான அனுமதிப்பத்திரக் கட்டணம் அந்த ஆண்டின் யூன் 30 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் ஆணைக்குழுவிற்குச் செலுத்தப்பட வேண்டிய போதிலும், அனுமதிப்பத்திர தாரர்களில் ஏறத்தாழ 70 சதவீதமானோர் மீளாய்வாண்டிற்கான அனுமதிப்பத்திரக் கட்டணங்களை 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் செலுத்தியிருக்கவில்லை.

(ஆ) ஆணைக்குழுவினால் 2016 திசெம்பர் 06 ஆந் திகதி ரூபா 1,754,910 செலவில் SAP எனும் பெயரில் புதிய கணனிக் கணக்கீட்டு முறைமையொன்று தாபிக்கப்பட்டிருந்ததுடன் அக்கணக்கீட்டு முறைமையினைப் பயன்படுத்தி ஆணைக்குழு 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளிற்கான கணக்குகளைத் தயாரித்திருந்த போதிலும், அதில் காணப்பட்ட குறைபாடுகள் கீழே தரப்படுகின்றன.

(i) கணக்கீட்டு முறைமையிலிருந்து ஏதேனுமோர் திகதிக்கான திருத்தமான பரீட்சை மீதியொன்றை பெற்றுக்கொள்ள முடியாதிருந்ததுடன், முறைமையினால் வழங்கப்படுகின்ற தகவல்களைப் பயன்படுத்தி பரீட்சை மீதியினை கைகளினால் (Manually) தயாரிக்க வேண்டியிருந்தது.

(ii) நிதிப் பிரிவின் உத்தியோகத்தர்களிற்கு இந்த முறைமைக்குள் நுழைவதற்கான அனுமதி வழங்கப்பட்டிருந்ததுடன், குறித்த உத்தியோகத்தர்களினால் முறைமைக்குள் உட்செலுத்தப்படுகின்ற தரவுகளின் சரியான தன்மையினை பரிசோதித்தல் மற்றும் அத்தரவுகளை அங்கீகரித்தல் ஆகியவற்றை உயர்மட்ட முகாமையாளர்களினால் மேற்கொள்வதற்கான முறையொன்று இம்முறைமையில் காணப்படவில்லை.

(iii) கணக்கீட்டு முறைமையினால் வழங்கப்படுகின்ற நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் பெறுமானத்தேய்வினை கணிப்பிடுவதற்கான வசதிகள் வழங்கப்பட்டிருந்த போதிலும், முறைமைக்கு உட்படுத்திய திகதி வரையிலும் பெறுமானத்தேய்வு காண்பிக்கப்படுவதுடன், குறித்த காலப்பகுதியொன்றுக்கான பெறுமானத்தேய்வை கணிப்பிடுவதற்கான இயலுமை காணப்படவில்லை.

(இ) 2017 திசெம்பர் 31 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் படி பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) பதவியணியினருக்கு வழங்கப்பட்டிருந்த இரண்டு கையடக்கத் தொலைபேசிகள் ஆண்டின் போது காணாமல் போயிருந்ததுடன், அது சம்பந்தமாக பணத்தினை அறவிடும் நடவடிக்கைகள் இது வரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) பயனுள்ள ஆயட்கால முடிவில் மீள ஒப்படைக்கும் நிபந்தனையுடன் வழங்கப்பட்டிருந்த மூன்று கையடக்கத் தொலைபேசிகள் பௌதீக மெய்மையாய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் படி 12 மடி கணனிகள் மற்றும் 08 ஆட் கணனிகள் தற்போது பயன்படுத்த முடியாத நிலையில் காணப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்ததுடன் அது தொடர்பில் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.4 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.2(டீ) மற்றும் (ஈ) பந்திகளின் பிரகாரம் புதிய பதவியணியினரின் நிறுவனக் கட்டமைப்பு திருத்தப்பட்டு அது பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மேற்கூறப்பட்ட சுற்றறிக்கையின் 9.3 ஆம் பந்தியின் பிரகாரம் ஆட்சேர்ப்புக்கள் மற்றும் பதவியுயர்வுகளிற்காக பொருத்தமான நடைமுறையொன்று காணப்பட வேண்டுமென்பதுடன், அந்த நடைமுறைக்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் மற்றும் பொது முயற்சிகள் திணைக்களத்தின் இணக்கப்பாட்டுடன் உரிய அமைச்சிற்கு அனுப்பப்பட்டு அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும், ஆணைக்குழுவின் ஆட்சேர்ப்புக்கள் மற்றும் பதவியுயர்வுகள் திட்டத்திற்காக பொது முயற்சிகள் திணைக்களத்தின் இணக்கப்பாடு மற்றும் உரிய அமைச்சின் அங்கீகாரம் என்பன பெறப்பட்டிருக்கவில்லை.

(இ) 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை 51 ஆனதுடன், உள்ளபடியான எண்ணிக்கை 43 ஆக இருந்தமையால் வெற்றிடங்களின் எண்ணிக்கை 08 ஆக இருந்தது. அத்துடன், அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடங்கியிருக்காத இரண்டு சிரேஷ்ட நிலை உத்தியோகத்தர்கள், 3 மூன்றாம் நிலை உத்தியோகத்தர்கள் மற்றும் இரண்டு முதல் நிலை உத்தியோகத்தர்கள் என்ற வகையில் 07 உத்தியோகத்தர்கள் ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

## 5. நிலைபேறான அபிவிருத்தி

### 5.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்தல்

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகள் தாபனத்தின் ''2030 நிகழ்ச்சி நிரல்'' இன் பிரகாரம் ஒவ்வொரு அரசாங்க நிறுவனத்தினாலும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவினால் அதனது விடயப்பரப்பிற்கு உட்பட்ட செயற்பாடுகள் சம்பந்தமாக எவ்வாறு செயற்படுதல் வேண்டுமென அறிந்து வைக்கப்பட்டிருந்தது.

(அ) மேற்குறிப்பட்டவாறு 2030 நிகழ்ச்சி நிரல் தொடர்பில் அறிந்து வைத்திருக்கப்பட்டிருந்தமையால் ஆணைக்குழுவினால் அதனது விடயப்பரப்பினுள் அடையப்பட வேண்டிய இலக்குகளான ''எல்லோராலும் தாங்கிக் கொள்ளக்கூடிய, நம்பகரமான, நிலைபேறான மற்றும் நவீன எரிசக்தி வழங்களை உறுதிப்படுத்துதல்'' என்ற நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள் இனங்காணப்பட்டிருந்த போதிலும், ஆணைக்குழுவின் 12 அடிப்படை இலக்குகளையும் நிலைபேறான இலக்குகளிற்கு இணைந்ததாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய நிலைபேறான அபிவிருத்தி, இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை அடைந்து கொள்வதற்கான வழிவகைகளையும் இலக்ககளின் அடைவினை அளவிடுவதற்கான குறிகாட்டிகளையும் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை

(ஆ) நிறுவனத்தின் குறிக்கோள்களினுள் நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களும் உள்ளடங்கியிருப்பதாகக் கருதி செயற்பட்டிருந்தமை காரணமாக நிலைபேறான இலக்குகளை அடைவதற்குத் தேவையான கருமங்கள் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடங்கியிருக்காததுடன், அக்கருமங்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகளை பாதீட்டில் புறம்பாக இனங்காண முடியாதிருந்தது.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்கள சுற்றுநிருபத்தின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியாண்டு முடிவுற்று 60 நாட்களிற்குள் குறித் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், ஆணைக்குழுவினால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஏப்ரல் 05 ஆந் திகதியன்றே கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

## 6.2 கொள்வனவு மற்றும் ஒப்பந்த செயற்பாடுகள்

### 6.2.1 கொள்வனவுகள்

ஆணைக்குழுவினால் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகள் தொடர்பில் 2006 ஒக்தோபர் 05 ஆந் திகதிய 6 ஆம் இலக்க சுற்றறிக்கையினால் திருத்தப்பட்ட 2006 சனவரி 25 ஆந் திகதிய 8 ஆம் இலக்க தேசிய கொள்வனவு முகவர் நிலையத்தின் கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையிலுள்ள பரிந்துரைகளிற்கு அமைவாக செயற்படாதிருந்த சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(i) 2.12 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் கொள்வனவு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களிலுள்ள சகல உறுப்பினர்களும் முதலாம் கூட்ட அமர்வில் தங்களது கையொப்பமிடப்பட்ட வெளிப்படுத்தல்களை (Sign Declarations) வழங்க வேண்டிய போதிலும், அவ்வாறு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) 5.3.10 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் ரூபா 2 மில்லியனுக்கு குறைந்த ஒப்பந்தங்கள் தொடர்பில் கூறுவிலைகள் செல்லுபடியாகும் காலம் 49 நாட்களாக காணப்பட வேண்டிய போதிலும், 17 ஆம் மாடியில் தளபாடங்கள் மற்றும் பொருத்துக்களிற்கான ரூபா 1,240,800 கிரயம் கொண்ட ஒப்பந்தத்தின் செல்லுபடியாகும் கூறுவிலைக் காலம் 120 நாட்களிற்கு மேற்பட்டிருத்தல் வேண்டுமென கூறுவிலை கோரல் ஆவணங்களில் குறிப்பிடப்பட்டிருந்தது.

(iii) 5.3.11 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் ரூபா 900,000 கிரயமான 100 முகப் புத்தக புகைப்படங்கள் (Facebook Images) மற்றும் 10 சலன (Animation) புகைப்படங்களை அபிவிருத்தி செய்வதற்கான கொள்வனவு தொடர்பில் பிணை பெறப்பட்டிருக்கவில்லை.

(iv) 6.3.3 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் கேள்விகளை திறக்கும் குழுவில் கொள்வனவுக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஆகக்குறைந்தது 02 உறுப்பினர்களேனும் காணப்பட வேண்டிய போதிலும், Designing and Printing of backdrop for public consultation EV charging station கொள்வனவுக்கான கேள்விகளை திறக்கும் குழுவில் ஒரு நபர் மாத்திரம் பங்குபற்றியிருந்தார்.

### 6.2.2 ஒப்பந்த நிர்வாகக் குறைபாடுகள்

வழங்குனருடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டிருந்த உடன்படிக்கையின் பிரகாரம் ஆவண முகாமைத்துவ முறைமையொன்றை (Document Management Sysytem) ஸ்தாபிக்கும் நோக்குடன் மென்பொருளை அபிவிருத்தி செய்வதற்காக 2014 நவம்பர் 28 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்த ஒப்பந்தம் 2015 சனவரி 14 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2016 யூன் 13 ஆந் திகதி பூரணப்படுப்பட வேண்டிய போதிலும், குறித்த பணியினை பூரணப்படுத்த முடியாதுள்ளதாகவும், குறித்த உடன்படிக்கை இரத்துச் செய்யப்படுவதாகவும் வழங்குனரால் 2017 மே 24 ஆந் திகதி கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. உடன்படிக்கை இரத்துச்செய்யப்படும் சந்தர்ப்பத்தின் போது உடன்படிக்கைக் காலம் முடிவடைந்து ஏறத்தாழ ஓராண்டு காலம் கடந்திருந்த போதிலும், உடன்படிக்கையினை முறித்துக்கொண்டமையால் ஏற்பட்ட நட்டத்தினை அறவிடுதல் சம்பந்தமான நிபந்தனை உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்காமை காரணமாக உடன்படிக்கை முறிக்கப்பட்டமை தொடர்பில் நடவடிக்கை எடுக்க முடியாதிருந்தது.

#### 6.2.3 தாமதிக்கப்பட்ட செயற்திட்டங்கள்

ஆணைக்குழு அமைந்துள்ள கட்டிடத்தின் 17 ஆவது மாடிக்காக தளபாடங்கள் மற்றும் பொருத்துக்களை வழங்குவது தொடர்பான ஒப்பந்தம் கொள்வனவு நடைமுறைகள் பின்பற்றப்பட்டு ரூபா 1,240,800 (வரி நீங்கலான) மொத்தக் கிரயத்தில் தனியார் கம்பனியொன்றுக்கு வழங்கப்பட்டிருந்தது. 2017 நவம்பர் 16 ஆந் திகதி கொள்வனவுக் கட்டளைக் கடிதம் வழங்குனருக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்ததுடன், கூறுவிலை கோரல் ஆவணங்களின் படி 30 வேலை நாட்களினுள் வேலைகள் முடிவுறுத்தப்படுதல் வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பணிகள் பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 6.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவினங்களிடையே 44 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு பயனுள்ள முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்திக் கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது ஆணைக்குழுவின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விஷேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | பதவியணியினர் நிர்வாகம் | பதவியணியினரின் நிறுவனக் கட்டமைப்பிற்காக அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாமை மற்றும் பதவியணியினரை ஆட்சேர்த்தல் மற்றும் பதவியுயர்த்துதல் நடவடிக்கைகள் முறையற்றிருந்தமை |
| (ஆ) | அனுமதிப்பத்திரக் கட்டணங்களும் கண்காணிப்புக் கட்டணங்களும் | வருமானங்கள் அறவிடப்படுவதனை வினைத்திறனாக மேற்கொள்வது தொடர்பில் கவனம் செலுத்தியிருக்காமை. |
| (இ) | செயல்நடவடிக்கைத் திட்டம் | செயல்நடவடிக்கைத் திட்டத்திலுள்ள இலக்குகள் அடையப்பட்டிராமை |